2011 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.வி. சேகர் அவர்கள், நேற்றையதினம் அவரிடத்திலே வரப்பெற்ற ஒரு மனுவை என்னிடத்தில் காட்டி அதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். நானும் ஆணையரிடத்தில் அதுபற்றிப் பேசி, நீதிமன்ற உத்தரவு எப்படி இருக்கிறதோ அவ்வாறு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறேன். மூன்றாவது நபர் பொறுப்பில் உள்ள திருக்கோஷ்டியூர் என்பதும் பாடல் பெற்ற ஸ்தலம். குறிப்பாக, இராமானுஜர் ‘ஓம் நமோ நாராயணா’ என்ற நாமத்தைத் தந்தருளிய ஸ்தலம். ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் திருக்கோஷ்டியூருக்கும் தொடர்பு இல்லை என்று சொல்லியுள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, நீதிமன்ற உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

மின் வேலி

*122256—திரு. எம்.ஆர். சுந்தரம்:

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதியில் மலைப்பகுதியைச் சுற்றியுள்ள இடங்களுக்கு மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

[2011 ஜனவரி 11

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியிலே ஆத்தூருக்குக் கூட்டுக் குடிநீருக்காக 271 கோடி ரூபாயிலே ஒரு திட்டத்தை அறிவித்து, அதற்கு அடிக்கல் நாட்டுவதற்காக நான் காலையிலே தமிழகத் துணை முதல்வர் அண்ணன் தளபதி அவர்களைச் சந்திந்தேன். அப்போது, 'உங்களது மாவட்ட அமைச்சரிடத்திலே சொல்லியிருக்கின்றேன், அடுத்த மாதத்திலே அந்த 271 கோடி ரூபாய் திட்டத்தைத் துவக்கி வைத்து, சமத்துவபுரத்தையும் திறந்து வைக்கிறேன்' என்று சொல்லியிருக்கின்றார்கள். அதேபோல, ஆத்தூருக்கு நேற்றையதினம் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் R.T.O. அலுவலகத்திற்கு ஒரு கட்டடத்தையும் கட்டித் தருகிறேன் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்தத் திட்டங்களெல்லாம் ஆத்தூரிலே செயல்படுத்தப்பட்டாலும், தலைவர் கலைஞர் அவர்கள் 3 தொகுதிகளுக்கு—ஒரு பழமொழி உண்டு. ஒரே கல்லிலே 2 மாங்காய் அடிப்பது என்று சொல்வார்கள். ஆனால், நமது கலைஞர் அவர்கள் ஒரே கல்லில் 3 மாங்காயை அடிப்பதுபோல—(மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்காடு பகுதியில் அதாவது வாழப்பாடி, அயோத்தியாபட்டினம், பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், அதேபோல கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி வீரவனூர் முதல் தலைவாசல் வரை பயன்படக்கூடிய இந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்த நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், தமிழகத்தினுடைய துணை முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் (மணியடிக்கப்பெற்றது) எங்களுடைய மாவட்ட அமைச்சர் அண்ணன் வீரபாண்டியார் அவர்களுக்கும். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர். சுந்தரம், கேள்வி மின் வேலி அமைப்பது பற்றியது. அதை மாத்திரம் சொல்லுங்கள்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மனமார்ந்த நன்றியையும், என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆத்தூர் பகுதியிலே என்னுடைய தொகுதியைச் சுற்றிலும் மலைப்பகுதி உள்ளது. நான் வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு விண்ணப்பம் கொடுத்தபோது, காப்புக்காடு சிலோன் காலனிக்கு மட்டும் 2 கிலோ மீட்டர் தூரம் கம்பி வேலி

2011 ஜனவரி 11]

அமைத்திருக்கிறார்கள். இன்னும் பைத்தூர்மலை காப்புக்காடு உள்ளது. கல்வராயன்மலை காப்புக்காடு, சடையக்கவுண்டர் காப்புக்காடு, முட்டல், சிறுவாச்சூர், மூடத்தூர் காப்புக்காடு பகுதி, பட்டிமேடு காப்புக்காடு பகுதி, நாகலூர் காப்புக்காடு பகுதி, மண்ணூர் காப்புக்காடு பகுதி ஆகிய பகுதிகளுக்கு 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு முள் வேலி அமைக்கக் கோருகிறேன். அங்கே வருகின்ற காட்டுப் பன்றிகள், மான் மற்றும் சில விலங்குகள் பயிர்களை நாசப்படுத்துகின்றன. அந்தப் பயிர்களை நாசப்படுத்தும்பொழுது விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது. இருந்தாலும், அந்தப் பயிர்களை அவர்கள் முழுமையாக அறுவடை செய்து பார்க்க முடியாமல் போகின்றது. நமது சார்பாக நாம் எவ்வளவுதான் பணம் கொடுத்தாலும், அந்தப் பயிரினுடைய முழுப் பலனையும் விவசாயிகள் அடைய வேண்டுமென்று நினைக்கின்றார்கள். அதற்கேற்றாற்போல நமது வனத் துறை அமைச்சர் அவர்கள் இந்த 22 கிலோ மீட்டருக்கும் முள்வேலி அமைத்துத் தருவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வ்னத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்டதைப்போல பட்டிமேடு காப்புக்காட்டில் 2 கிலோ மீட்டர், சிலோன் காலனி அருகில் 2 கிலோ மீட்டர் தொலைவிற்கு சூரிய ஒளி மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. நெய்மலை, காப்புக்காட்டில் கணேசபுரம் கிராமத்தில் இந்த ஆண்டு இன்னும் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் அந்தப் பணி முடிவடையும். அவர் கேட்டிருப்பதைப்போல, 22 கிலோ மீட்டர் என்பது வரும் ஆண்டில் அமைத்துத் தரப்படும். ஏனென்று கேட்டால், வன விலங்குகள் இன்னும் அதிகமாக இருக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள், கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலே அதிகமாக மின் வேலி அமைக்கும் பணி நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தால் வரும் ஆண்டில் அதைப்பற்றி கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

[2011 ஜனவரி 11

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பன்றி, மான் வந்தாலும்கூட பட்டாசு வெடித்தால் ஓடிவிடுகின்றன. ஆனால், காட்டு எருமை வந்தால் எதிர்த்து நிற்கின்றது. விவசாயிகள் அஞ்சுகிறார்கள். ஆகையினால், வனத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல வெகு விரைவாக அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்கிறீர்களா? விரைவாக வைக்க வேண்டும் என்றுதான் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அமைக்கப்படும். அவர் குறிப்பிட்டதைப்போல, நான் முன்பே சொல்லியிருந்தேன். வரும் ஆண்டில் அது அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதி அதிகமாக மலைகளும், காடும் நிறைந்த பகுதியாகும். இங்கே விவசாயிகள் பயிர் செய்கின்ற நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களைக் காட்டுப் பகுதியிலிருந்து வருகின்ற பன்றிகள் சேதப்படுத்தி விவசாயிகளுக்கு அதிகமான நஷ்டத்தை ஏற்படுத்துகின்றன. ஆகவே, இந்த மலைகளின் அடிவாரத்தில் அல்லது காடுகள் அடிவாரத்தில் மின் வேலியை அமைத்து, விவசாயிகளைக் காக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் இந்த நான்கரை ஆண்டுக் காலத்திலே, சூரிய ஒளி மின்வேலி அதிகமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. கடந்த ஆட்சிக் காலத்திலே 62½ கிலோ மீட்டர்தான் அமைத்து இருந்தார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் 1,167.5 கிலோ மீட்டரும், இந்த

2011 ஜனவரி 11]

ஆண்டு 125 கிலோ மீட்டரும், ஆக 1,292.5 கிலோ மீட்டர் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர் குறிப்பிடுகின்ற வேலூர் மாவட்டத்தில்—அவர் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்—அந்தப் பகுதியிலே 33 கிலோ மீட்டர்வரை இந்த ஆண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டுகளிலும் தேவைக்கேற்ப அந்தச் சூரிய ஒளி மின் வேலி அமைக்கப்படும். ஆனால், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலேதான் வன விலங்குகள்—யானையோ, சிறுத்தையோ, புலிகளோ அதிகமாக வந்து, பயிர்களைச் சேதப்படுத்துகின்றன; அல்லது, மனித உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கின்றன. எனவே, அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தப் பகுதிகளிலே சூரிய ஒளியில் இயங்குகின்ற மின் வேலி அமைக்கப்படுகிறது. இன்னும், அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத பகுதிகளில், இந்த ஆண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அகழிகள் வெட்டுவதற்காக, குறிப்பாக கோவை மாவட்டத்திலே தூடியலூர், அதைப்போல மேட்டுப்பாளையம் பகுதிகளிலே அதிகமான சேதங்களை விளைவிக்கின்ற காரணத்தால் 100 கிலோ மீட்டர்; நீளத்திற்கு உடனடியாக அகழிகள் வெட்டுவதற்காக நான்கரை கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இன்னும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அதைப்போல சேலம் மாவட்டத்தினுடைய சில பகுதிகளில், ஈரோடு மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் சில பகுதிகளிலும், இதைப்போல 'vulnerable points', எங்கெங்கு யானைகள் அல்லது வன விலங்குகள் ஊடுருவுகின்ற வாய்ப்பு இருக்கிறதோ அந்தப் பகுதிகளிலெல்லாம் சூரிய ஒளியில் இயங்குகின்ற மின் வேலியும், அதைப்போல, அகழிகளும் அமைத்து அவற்றை முற்றிலுமாகத் தடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மீறிவந்து ஏதாவது சேதப்படுத்தினால், தலைவர் கலைஞர் ஆட்சியிலேதான் அதற்கு முழுமையாக நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விட்டுச்சென்ற அந்த நிவாரணத்தைக்கூட தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே சென்ற ஆண்டு வரை, 3 கோடியே, 84 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுகூட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கித் தந்து, அவ்வப்பொழுது நிவாரணங்கள் எல்லாம் வழங்கப்படுகின்றன. 30 ஆம் தேதி நாங்கள் கிருஷ்ணகிரி மாவட்டம் சென்று 669 பேருக்கு 31,67,400 ரூபாயை நிவாரணமாக வழங்கிவந்திருக்கிறோம். தலைவர் அவர்கள், தேவைக்கு ஏற்ப, மனித உயிர்கள் இழப்பிற்கு—முன்பு ஒரு இலட்சம் ரூபாய் இழப்பாக வழங்கப்பட்டது—தற்போது ஒன்றரை இலட்சம் ரூபாய்

இழப்பாக வழங்கப்படுகிறது. அதைப்போலவே, சிறு காயம் ஏற்பட்டால் 20 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை தற்போது 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், இப்போது மாவட்ட ஆட்சித் தலைவருடைய Notification-மூலம் அமலுக்கு வந்திருக்கின்ற காரணத்தால், 25,000 ஏக்கரில் இப்போது இரப்பர் மரங்களை வெட்ட முடியாமல், அந்தக் காட்டுப் பகுதிகளை விற்கவும் முடியாமல், வாங்கவும் முடியாமல், தானம் கொடுக்கவும் முடியாமல், கன்னியாகுமரி மாவட்டத்து மக்கள் மிகவும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, வனத் துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவருடைய Notification-ஐ வாபஸ் வாங்குவதற்கோ அல்லது வனச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவந்தோ அந்த இரப்பர் மரங்களை வெட்டுவதற்கு—25 ஆண்டுகளுக்கு பிறகு இரப்பர் மரத்தில் பால் வராது. அதற்கு மேல் வளர்ந்து இருக்கும் மரங்கள் waste-ஆக நிற்கின்றன. மீண்டும் நாம் மரங்களை நட்டு வளர்த்தால்தான் காடுகளை அங்கே உருவாக்கி பணம் பெறமுடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் amendment கொண்டுவருவதற்கோ அல்லது Notification-ஐ வாபஸ் பெறுவதற்கோ நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வனங்கள் அழிக்கப்படக்கூடாது என்பதற்காக தமிழ்நாட்டிலே 1882 ஆம் ஆண்டிலே வனப் பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. அதன் பின்னால் இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு 1949-லே தனியார் காடுகள்,

2011 ஜனவரி 11]

வனமாக அறிவிக்கப்பட்ட காடுகளிலே மரங்களை அவர்கள் அதிகமாக வெட்டிவிடக்கூடாது என்பதற்காக தனியார் காடுகளில் மரப் பாதுகாப்புச் சட்டம் என்ற சட்டம் 1949-லே இயற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் தங்கள் காடுகளிலே வளர்கின்ற மரங்களை வெட்டவேண்டுமென்றால், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு கொடுத்தால், அதைப் பரிசீலித்து நியாயமாக இருந்தால் அதற்கு அனுமதி தருகிறார்கள். அதைப்போலவே, நிலத்தை மாற்றுவது என்றாலும், தனியார் நிலங்களை மற்றவர்களுக்கு மாற்றுவது என்றாலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முன்கூட்டியே தெரிவித்து, அவர்களுடைய அனுமதியைப் பெற்று நிலத்தை மாற்றலாம். மாற்றக்கூடாது என்று சட்டம் இல்லை. நீங்கள் சொல்வதைப்போல இரப்பர் மரத்தை மட்டும் அல்ல; மற்ற மரங்களையும் வெட்டுவதற்கு அனுமதி இருக்கிறது. அவர்கள் மரங்களை வெட்டலாம். ஆனால், அனுமதி பெற்று வனமாக அறிவித்திருக்கின்ற அந்தப் பகுதிகளில் மட்டும் வெட்டவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையைப் பொறுத்தமட்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில், புதிய அரசாணையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பிறப்பித்துள்ளதாக நாங்கள் அங்கு சென்றபோது பொதுமக்கள் தெரிவித்தார்கள். அதாவது, வனத் துறை காடுகளுக்குப் பக்கத்தில் இருக்கின்ற பட்டா நிலங்களை வனக் காடுகளாக அறிவிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் பட்டா காடுகளாக, பட்டா தோட்டங்களாக, தனியார் நிலங்களை இதுவரை அனுபவித்துக்கொண்டிருந்தவர்களின், கிட்டத்தட்ட நாற்பதாயிரம் ஹெக்டேர் என்ற அளவிற்கு தனியார் பட்டா காடுகளை, வனத் துறை எடுத்துக்கொள்வதாக அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது என்ற விவரங்களைத் தெரிவித்தார்கள். இதனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பட்டா நிலங்களில் விவசாயம் செய்துகொண்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் மிகுந்த அச்சத்துடனும், கவலையுடனும் இருப்பதாக அறியப்படுகிறது.

ஆகவே, இந்த அரசு இதைப்பற்றி அறிந்திருக்கிறதா? இந்த அரசு பிரத்தியேகமாக இதற்கு அரசாணையை வெளியிட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று கன்னியாகுமரி மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைச் சந்தித்து தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தினார்கள். மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் என்னையும், நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களையும் அழைத்து, அதேபோல துறையினுடைய செயலாளர், தலைமைச் செயலாளரை அழைத்து விவாதித்திருக்கிறார்கள். நான் முன்பே குறிப்பிட்டதைப்போல அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால், அவர்கள் எப்போது வேண்டுமானாலும் மாற்றிக்கொள்வதற்கு, முன் அனுமதி இல்லாமல் மாற்றிக்கொள்வதற்கு விரும்புகிறார்கள். முன் அனுமதி பெற்று, எப்போது வேண்டுமானாலும் நிலத்தை விற்கலாம். அவர்கள் விருப்பத்தை மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள். தலைமைச் செயலாளரிடம் அதைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள். விரைவில் அதற்கு ஒரு நல்ல முடிவு ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

17—

நான்கு வழிச் சாலை

*14956—திரு. மு. அப்பாவு:

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திருச்செந்தூர்-கன்னியாகுமரி கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்கு வழிச் சாலையாக மேம்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?